# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2002/35 - 2017 ජනවාරි මස 18 වැනි බදාදා - 2017.01.18

*2002/35 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78* (XV)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*27 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும் (2016, திசெம்பர் 01 ஆந் திகதிய 1995/27 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் தொடர்பில் 1986, செத்தெம்பர் 26 ஆந் திகதிய 420/25 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, பின்வருமாறு இக்கட்டளை மூலம் திருத்துகின்றேன் :-*

*(1)* அக்கட்டளையின் (iv) ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியில் "சுகாதாரக் கவனிப்பு விஞ்ஞானங்கள் பீடம் ; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சுகாதாரக் கவனிப்பு விஞ்ஞானங்கள் பீடம் ; " என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

*(2)* அக்கட்டளையின் (iv) ஆம் பந்தியின் (உ) என்னும் உட்பந்தியினை உடனடுத்துப் (ஊ) என்னும் உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :-

"(ஊ) தொழில்நுட்ப பீடம் ; அத்துடன்" ;

*(3)* அக்கட்டளைக்கான அட்டவணையின் I ஆம் நிரலில் காணப்படும் "சுகாதார கவனிப்பு விஞ்ஞானங்கள் பீடம்" என்னும் பதிவினையும் அதனது II நிரலிலுள்ள நேரொத்த பதிவுகளையும் உடனடுத்துப் பின்வருவதனை சேர்ப்பதன் மூலமும்:-

| "நிரல் I | "நிரல் II |
|---|---|
| தொழில்நுட்ப பீடம் | 1. உயிர்முறைமை தொழில்நுட்பத்துறை<br>2. பல்துறைசார் கற்கைகள் துறை.". |

லக்ஷ்மன் கிரியெல்ல,
உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2016, திசெம்பர் 31.*

*02- 102*